**CC.No. 76 /2020** **நாள் : 17.06.2025**

PW 3 - திரு.குணசேகரன்

**<u>சாட்சி மனுவின் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப் பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1) அ.சா.1 எனக்கு சித்தி என்றால் சரிதான். எதிரிகள் எனக்கு உறவினர்கள் என்றால் சரிதான். பூபதி எனக்கு தகவல் சொன்ன பிறகு எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் நடந்து சென்றேன். எனக்கு முன்னாடி சத்தம்போட்டு தகாத வார்த்தைகள் பேசிக் கொண்டிருந்தார். வீட்டிலிருந்து சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் 1 கிலோ மீட்டர் இருக்கும் என்றால் சரியல்ல. ½ கிலோ மீட்டர் இருக்கும். நான் 4.30 மணிக்கு சென்று இருப்பேன் என்றால் சரிதான். சம்பவத்தின்போது எதிரி பழனிச்சாமிக்கும் காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் இருந்தார் என்றால் சரிதான். யார் யார் மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் நான், அண்ணன் பாலவிக்னேஷ் ஆகியோர்கள் சென்றோம். நாங்கள் செல்வதற்கு முன்பாக அவர்கள் மருத்துவமனைக்கு சென்றுவிட்டார்கள்.

2) முதல் விசாரணையில் சொன்னவாறு எந்தவொரு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். ஜெகதீஸ்வரன் வாகனத்தில் வேகமாக சென்று எதிரி பழனிச்சாமி மீது மோத சென்றுவிட்டார் என்றாலும், ஏன் வேகமாக வருகிறீர்கள் என்று கேட்டதற்கு ஜெகதீஸ்வரன் அவரது பெற்றோரை வர வைத்து பிரச்சனை செய்துள்ளார் என்றால் நான் பார்க்கவில்லை.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA
Date: 2025.06.17 19:43:53 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

PW 2 - திருமதி.லலீதா

**சாட்சி மனுவின் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப் பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

1) முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்களை தான் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். சம்பவம் குறித்து இளைய மகன் பூபதி தான் தகவல் சொன்னார் என்றால் சரிதான். மாலை 3.50 மணிக்கு தகவல் சொன்னார். நான், எனது கணவர் எதில் சென்றோம் என்றால் வேகமாக நடந்து சென்றோம். மருத்துவமனைக்கு யார் யார் சென்றோம் என்றால் நான், பூபதி, ஜெகதீஸ்வரன், பாலா, குணசேகரன் ஆகிய ஐந்து பேர் சென்றோம். எந்த வண்டியில் சென்றோம் என்றால் இருசக்கர வாகனத்தில் சென்றோம். புகார் எப்போது கொடுத்தோம் என்றால் மருத்துவமனைக்கு சென்றுவிட்டு வந்து இரவு 7.00 மணிக்கு கொடுத்தோம். புகாரியை யார் எழுதியது என்றால் மோகன் என்ற உதவி ஆய்வாளர் எழுதினார். பாலா என்பது எனது அண்ணன் மகன் என்றால் சரிதான்.

2) எதிரி பழனிச்சாமிக்கு வழக்கு சம்பவத்தில் அடிபட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் சரிதான். எனது கணவர் ஈஸ்வரன் தான் எதிரி பழனிச்சாமியை அடித்து காயப்படுத்தினார் என்றால் அவர்கள் தகாத வார்த்தை பேசியதால் இரு தரப்பினர்களும் வாக்குவாதம் செய்து அவர்கள் எங்கள் மீது அடித்துவிட்டார்கள். எனது கணவரும் எதிரியை அடித்தார் என்றால் சரிதான். எனது மகன் வேகமாக சென்று எதிரி பழனிச்சாமி மீது மோத சென்றதில் அவர் மிகவும் சிரமத்துடன் தப்பித்துவிட்டார் என்றால் சரியல்ல. நான், எனது கணவர் சென்று எதிரியை அடித்து காயத்தை ஏற்படுத்தியதில் சட்ட நடவடிக்கையிலிருந்து தப்பிக்க வேண்டி பொய்யாக புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்னவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், என்னையும், எனது மகனையும் அடிக்கவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2025.06.17 19:43:58 +05'00'

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

PW 1- திரு.ஜெகதீஸ்வரன்

**சாட்சி மனுவின் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப் பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

1) என்ன படித்துள்ளேன் என்றால் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். முதல் விசாரணையில் சொல்லியுள்ள தேதியில் தான் சம்பவம் நடந்ததா என்றால் ஆமாம். முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்களை தான் புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். புகாரை சம்பவம் நடந்த அன்று இரவு கொடுத்தேனா என்றால் மறுநாள் காலை 8.00 மணிக்கு கொடுத்தேன். புகார் கொடுத்தபோது போலீசார் விசாரித்த பின்னிட்டு நீதிமன்றத்திற்கு தான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். புகாரினை யார் எழுதியது என்றால் எனது அண்ணன் சங்கர் எழுதினார். அதன் பின்னிட்டு போலீசார் எழுதினார்.

2) போலீசார் எழுதிய பேப்பரில் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். புகார் கொடுத்த சமயத்தில் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஒரு கையொப்பம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும், எனது வீட்டிற்கும் 1 கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவ நடந்த சமயத்திலோ, அதற்கு பின்னிட்டோ பொது மக்கள் யாரும் இல்லை என்றால் சரிதான். அப்பா, அம்மா எவ்வளவு நேரம் கழித்து வந்தார்கள் என்றால் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்திலிருந்து ½ மணி நேரம் கழித்து வந்தார்கள். அப்பா, அம்மா எதில் வந்தார்கள் என்றால் ஓடி வந்தார்கள். அப்பா, அம்மாவுடன் யாரும் வந்தார்களா என்றால் அப்பா, அம்மாவிற்கு பின்பு எனது தம்பி வந்தார். அதற்கு பின்பு பெரியப்பா மணி வந்தார். பெரியப்பா எப்படி வந்தார் என்றால் ஓடி வந்தார்.

3) மருத்துவமனைக்கு யார் யார் சென்றோம் என்றால் நான், அம்மா, குணசேகரன் ஆகிய மூவரும் மருத்துவமனைக்கு நடந்து சென்றோம். வேறு யாரும் மருத்துவமனைக்கு வரவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது 6 பேர் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த 6 பேரின் பெயர்களை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். எதிரிகள் மருத்துவமனையில் உள்ளார்கள், அவர்களை விசாரிக்க முடியாது என்று போலீசார் சொன்னார். எதிரி பழனிச்சாமிக்கு சம்பவத்தில் இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றால் சரிதான். எனது அப்பா ஈஸ்வரன், எதிரி பழனிச்சாமியை அடித்து காயத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. நான், எனது தம்பியும் இருசக்கர வாகனத்தை வேகமாக இயக்கி சென்று எதிரி பழனிச்சாமி மீது மோத சென்றோம் என்றால் சரியல்ல. அவர் மிகவும்

சிரமத்துடன் உயிர் தப்பினார் என்றாலும், ஏன் வேகமாக வந்தீர்கள் என்று எதிரி பழனிச்சாமி கேட்டதற்கு எனது பெற்றோர்களை வரவைத்து எதிரி பழனிச்சாமியை அடித்து காயத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்னவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், சட்ட நடவடிக்கையிலிருந்து தப்பிக்க வேண்டி பொய்யாக புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2025.06.17 19:44:03 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.